ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் மீதான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

ஒக்டோபர் 1, 2015

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது அமர்வில் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள்' எனும் தலைப்பின் கீழ் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) வரவேற்கிறது. கடந்த கால நிலைகளிலிருந்து ஓர் அப்பட்டமான மாறுதலாக, தீர்மானத்திற்கு மசிடோனியா, மொன்டேநீக்குரோ, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான், சியோரெலியோன், அல்பேனியா, நோர்வே, சுவிற்ஸர்லாந்து மற்றும் பல்வேறு ஏனைய நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசாங்கமும் இணை அனுசரனை வழங்கியது. இது கடந்த காலங்களில் வன்முறை மற்றும் திட்டமிட்ட தவறுதல்களை ஏற்றுக்கொள்தல் மற்றும் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீள் நடைபெறாதென்பதற்கான உத்தரவாதங்கள் என்பவற்றை இலக்காகக் கொண்ட நம்பத் தகுந்ததான முன்னெடுப்பகளின் தேவை தொடர்பில் ஒரு முக்கியமான மாற்றத்தையும் குறிக்கிறது. இலங்கை அரசாங்கத்தின் இந்த துணிச்சலான நகர்வை மா.கொ.நி அங்கீகரிக்கின்றதுடன், அதன் சொந்த வாக்குறுதிகளை அமுல்படுத்துவதில் அரசாங்கம் முன்னுள்ள சவாலான பணி மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான அரசியல் துணிவையும் கவனத்தில் கொள்கிறது.

இந்தத் தீர்மானம் 2015இல் இரண்டு வரலாற்று ரீதியான தேர்தல்களினால் ஆணைப்படுத்தப்பட்ட ஒரு புதிய இலங்கை நோக்கிய ஒரு நிலைமாற்றத்தின் முக்கியமான படிமுறைகளிலொன்றைக் குறிக்கிறது. தற்போதைய தீர்மானம் சர்வதேச செயற்பாட்டாளர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்புடன் நீதி முறையான மற்றும் நீதி முறையல்லாத இரு வகையான முன்னெடுப்புகள் சம்பந்தப்பட்ட ஒரு முழுமையான நிலைமாற்று நீதிக் கொள்கை மற்றும் பொதியை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்திற்கான ஒரு கட்டமைப்பை அளிப்பதாக மா.கொ.நி காண்கிறது. தீர்மானமானது ஒரு விசேட நீதிமன்றம் மற்றும் உண்மை தெரிவிக்கும் ஆணைக்குழு, காணாமற் போனவர்கள் தொடர்பாக இலங்கையின் கணிசமான வழக்குத் தொகைகள் மீதான நடவடிக்கை மற்றும் குறிப்பிட்ட சட்டச் சீர்திருத்தங்கள் உள்ளிட்ட பல நிறுவன அமைப்புகளின் ஸ்தாபித்தலுக்கும் கோருகிறது. அத்தோடு, தீர்மானம் அரசியல் தீர்வு மற்றும் அரசியல் அதிகாரப் பகிர்வு உட்பட ஏனைய பல பற்றுறுதிகளையும் கவனத்தில் கொள்கிறது. மேலதிகமாக, பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களின் அறிமுகம், நிலத்திற்கு உண்மையான உரிமை கொண்ட மக்களிற்கு காணிகளை மீளக் கையளித்தலை துரிதப்படுத்தல் மற்றும் பல்வேறுபட்ட தாக்குதல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை நடாத்துதல் உட்பட நீதிக்கான நிலைமாற்றம் நோக்கியும் மற்றும் இலங்கையில் அனைத்து மக்களினதும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் பல முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அரசாங்கத்தை ஊக்கப்படுத்துகிறது.

வாக்குறுதியளிக்கப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுடன் இலங்கையில் ஒரு பெரும் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் தொடர்பான அரசாங்கத்தின் அண்மைய பற்றுறுதிகள் மற்றும் இடைக்கால நீதிச் செயன்முறைகள் என்பன ஒரு புதிய இலங்கையை அநேகம் வடிவமைக்கும். சீர்திருத்தங்களுடன் முன்னோக்கிச் செல்கையில், சர்வதேச குற்றங்களுக்கு வகை சொல்லும் கொடூரமான குற்றங்களை ஆவணப்படுத்தும் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான விசாரணையின் (OISL) கண்டறிதல்கள் மீது பிரதிபலித்தலைக் காண்பிப்பதும் முக்கியமாகிறது. பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள்

என்பவற்றுடன் கடந்த காலத் தவறுகள் மற்றும் கட்டமைப்புக் குறைபாடுகள் பற்றியும் அறிக்கை குறிப்பிடுகிறது. இந்தக் கடந்த காலம் தொடர்பாகக் கையாள்கையில், ஒரு கலப்பு நீதிமன்றத்தை ஸ்தாபிப்பதற்கான அதன் கோருதல், சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பயனுறுதியான பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய அனைத்து பங்குதாரர்களுடன் உண்மையான கலந்தாலோசனை உட்பட மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கையின் கண்டறிதல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு மீள்செல்வது அவசியமாகிறது.

எதிர்வரும் வாரங்கள் மற்றும் மாதங்களில், மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையின் கண்டறிதல்கள், தீர்மானம், மற்றும் அரசாங்கத்தின் சொந்தப் பற்றுறுதிகள் என்பவற்றின் கலந்தாலோசித்தல் மற்றும் பழி வாங்கப்படலாம் என்ற அச்சம் இல்லாமல் விவாதித்தல் என்பவற்றுக்கான சூழ்நிலை அமையும். அத்தோடு, அனைவரினாலும் கூட்டான உள்முகப் பார்வைக்கான தருணமும் இதுவாகும், இதன் மூலம் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை அடைவதற்கு இந்த தனித்தன்மையான சந்தர்ப்பத்தின் முழுமையான ஆற்றல் பயனுறப் படலாம். இந்தத் தீர்மானம் இலங்கையின் ஒரு இருண்ட அத்தியாயத்திற்கான ஒரு முடிவை அநேகம் குறிக்கலாம். அரசாங்கம் அதன் வாக்குறுதிகளை கடைப்பிடிப்பதற்கான அதன் துணிவையும் மற்றும் பற்றுறுதியையும் வெளிக்காட்டுவதற்கு விரைவாகவும் மற்றும் தீர்மானமான வகையிலும் செயற்படுதல் வேண்டும். பிரஜைகளாக, இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தை பற்றிப் பிடித்து மற்றும் 2015இன் இரண்டு தேர்தல்களிலும் எங்களது நாட்டுக்கான திசையின் ஜனநாயக மாற்றத்தை ஆணைப்படுத்திய அனைத்து இலங்கை மக்களின் உறுதியான அரசியல் பங்களிப்பை நினைவுபடுத்தி எங்களது எதிர்காலத்தை வடிவமைப்பதில் முனைப்போடு பங்குபற்றுதல் வேண்டும்.

குறிப்பாகத் தீர்மானம் மற்றும் பொதுவாக உலகுடனான எங்களது தொடர்புகளின் கூடுதல் ஆக்கபூர்வமான புதிய நடைமுறை என்பவற்றை எதிர்ப்பவர்கள் அரசின் இறையாண்மை இழத்தல் தொடர்பாக வேண்டுமென்றே பெரிதுபடுத்தப்பட்ட மற்றும் தவறாக வழிநடாத்தும் வாதங்களில் பொதுவாகத் தங்கியுள்ளனர். இறையாண்மை மற்றும் சமகால சர்வதேச ஒழுங்கு என்பவற்றின் வழக்கொழிந்து போன இந்தக் கருத்துருக்களுக்கு அப்பால், முன்னைய ஆட்சியின் சர்ச்சைப்படுத்தும் மற்றும் ஒத்துழைக்காத வெளிநாட்டுக் கொள்கையே இலங்கையில் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பை சீராக்குவதற்குப் பதிலாக அதிகரிக்க வைத்தது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். மிக முக்கியமாக, தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டவை உட்பட, தற்போதைய சீர்திருத்த நடவடிக்கைகள், அரசியலமைப்பு ரீதியான ஜனநாயகம், பன்மைத்துவம், உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் எங்களது நாட்டுக்கான ஒரு புதிய மற்றும் ஐக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு அனைத்து இலங்கை மக்களும் ஜனநாயக ரீதியில் ஒரு தடவையல்ல இரு தடவைகள் ஆணைப்படுத்தியுள்ளனர் எனும் அடிப்படை உண்மையை அவர்கள் கவனம் செலுத்தாது விட்டு விடுகின்றனர். ஒரு ஜனநாயக நாடு அதன் எதிர்காலத்தை அதன் சொந்த விருப்புகளுக்கு அமைய தீர்மானிப்பதற்கான செயற்திறனை அது கருதவில்லையாயின் இறையாண்மை என்பது எந்த அர்த்தத்தையும் கொண்டிருக்கவில்லை. இந்த அடிப்படைச் சீர்திருத்தங்களை ஒரு நோக்கத்தோடு மேற்கொள்தல் மற்றும் கடந்த காலத்துடன் அர்த்தமுள்ள வகையில் கையாள்தல் என்பவற்றின் மூலமான முக்கியத்துவம், கடந்த காலத்தின் வன்முறை மற்றும் ஆழமான பிரிவுகள் கவனம் செலுத்துதல் மற்றும் அதைத் தாண்டிச் செல்லுதல் என்பவற்றுக்கான தவிர்க்க முடியாத தேவையில் தங்கியுள்ளது. அப்பொழுது மட்டுமே, ஒவ்வொரு வெற்றிகரமான பன்மைத்துவ ஜனநாயகத்தின் மையத்தில் இருக்கும் சுதந்திரம் மற்றும் பொறுமை என்பவற்றின அடிப்படையில் அரசியல் கருத்தொற்றுமையின் அடிப்படைகளை நாங்கள் ஸ்தாபிக்க முடியும்.